2026  பிப்ரவரி  மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர்  :  49/2025

2026–ஆம் ஆண்டு  பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – கார்த்திக்கேயன் |
| தகப்பனார் பெயர்: | சுருளிராஜ் |
| ஊர்: | எஸ்.வாடிப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | பெயிண்டர் |
| வயது : | 39 |

19.02.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சடையால்பட்டி, எஸ்.வாடிப்பட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 30.11.2024ம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள கட்டப்பொம்மன் சிலை அருகில் நானும், பொம்மையசாமி என்பவரும் நின்றுக்கொண்டிருந்தபோது, கட்டப்பொம்மன் சிலை அருகில் பாண்டி என்பவரின் வீடு உள்ளது, அதன்

அருகில் எதிரி ஜெயபால் வீடு உள்ளது. பாண்டியனின் மகள்வழி பேரன் கோபிநாத் கைப்பேசியை வைத்து விளையாடி கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி ஜெயபால் அவர் விளையாடிக்கொண்டிருந்த கைப்பேசியை கேட்டப்போது, அவர் தர மறுத்தார்., எதிரி கைப்பேசியை பிடுங்கிக்கொண்டார். கோபிநாத்தின் பாட்டியை சென்று அழைத்து வந்தார்.

2. பாட்டி பெயர் வசந்தா ஆகும். வசந்தா வந்து, ஜெயபாலிடம் ஏன் கைப்பேசியை பிடுங்கினாய் என்று கேட்டதற்கு ஜெயபால் நான் பிடுங்கவில்லை என்று தேவுடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் வசந்தாவை திட்டி கைப்பேசியை கீழே எறிந்தார். ஏன் இப்படி பேசிகிறாய் என்று எதிரியிடம் கேட்டதற்கு கல்லை எடுத்து வசந்தா மீது கையில் எறிந்துவிட்டார். அதனால் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. அந்த சத்தத்தை கேட்டு பாண்டி என்பவர் வீட்டிலிருந்து ஓடிவந்தார். நீ ஏன்டா வருகிறாய் என்று எதிரி வீட்டிலிருந்து கத்தியை எடுத்து வந்தார். பின்னர் பாண்டியின் இடதுப்புற நெஞ்சு, இடதுப்புற விலா எலும்பில் கத்தியால் குத்தினார். பாண்டியன் சத்தம் போட்டார். பாட்டி பயந்துக்கொண்டு சத்தமிட்டவுடன் நானும், பொம்மையசாமியும் சென்று பாண்டியனை தூக்கி பக்கத்தில் உட்கார வைத்து ஆம்புலன்ஸிற்கு தகவல் கொடுத்து, ஆம்புலன்ஸ் வந்தவுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். வசந்தா உடன் சென்றார். எதிரி குத்திய கத்தி மரக்கைப்பிடியுடன் சுமார் 3/4 அடி நீளம் இருக்கும். அந்த கத்தி ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. சம்பவ நேரம் காலை 07.30 என்றால் சரிதான். எத்தனை மணிக்கு

காயம்பட்டவரை ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பினேன் என்றால் 8.00 மணி இருக்கும். எனது வீடு எங்குள்ளது என்றால் சம்பவ இடத்திலிருந்து 200 மீட்டர் தூரத்தில் இருக்கும். இவ்வழக்கை தவிர்த்து ஜெயபாலுக்கு எதிராக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை, எதிரி எனது மாமா ஆவார். ஆம்புலன்ஸில் யார் யார் உடன் சென்றார்கள் என்றால் வசந்தா, கோபிநாத், கோபிநாத் அக்கா ஆகியோர்கள் சென்றார்கள். நானும், பொம்மையசாமியும் ஆம்புலன்ஸில் செல்லவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவ நடந்தவுடன் போலீசார் வந்தார்களா அல்லது ஆம்புலன்ஸ் வந்தவுடன் வந்தார்களா என்றால் மாலை நேரத்தில் வந்தார்கள். சம்பவ நடந்து, அலறல் சத்ததம் கேட்டுத்தான் வந்தேன் என்றால் நாங்கள் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தோம். மருத்துவமனைக்கு சென்று பாண்டியையும், வசந்தாவையும் பார்த்தோமா என்றால் இரண்டு நாட்கள் கழித்து மாலையில் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எதிரியின் குடும்பத்திற்கும் பாண்டியின் குடும்பத்திற்கும் ஏற்கனவே புகைமூட்டல் தொடர்பாக பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றது என்றால் ஜெயபால் வீட்டிற்கு அருகில் பாலத்திற்கு பக்கத்தில் நடைபெற்றது. அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்டவர்களை பார்த்தேன் என்றால் சரிதான்.

5. நான் சென்று பார்த்தப்போது பாண்டி என்பவர் சுயநினைவுடன் பேசிக்கொண்டிருந்தாரா என்றால் இல்லை, வசந்தா பேசினார். சம்பவம் நடந்த சமயத்தில் ஊர்க்காரர்கள் யார் இருந்தார்கள் என்றால் நானும், பொம்மையசாமியும் இருந்தோம், அவரை தூக்கி உட்கார வைத்தப்பிறகு

தான் ஊர்க்காரர்கள் வந்தார்கள். நான் சொன்னதுப்போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கனவே புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்ததால் புகார்தாரருக்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி பாண்டியனை அரிவாளால் குத்தவில்லை என்றாலும், பாண்டியன் அரிவாளை கொண்டுவந்து மிரட்டியதால் எதிரி பயந்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றுவிட்டார் என்றாலும், பாண்டியன் தடுக்கி விழுந்து அதில் ஏற்பட்ட காயத்திற்காக புகார் கொடுக்கப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.19 18:09:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
19.02.2026

2026 பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 – பொம்மையசாமி |
| தகப்பனார் பெயர்: | பெருமாள் |
| ஊர்: | சடையால்பட்டி – வாடிப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 33 |

19.02.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சடையால்பட்டி–வாடிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி எனக்கு அண்ணன் முறை ஆவார். கடந்த 30.11.2024 ம் தேதி காலை 7.30 மணிக்கு நானும், கார்த்திக்கேயன் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள கட்டப்பொம்மன் சிலை அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். வசந்தா என்பவருடைய

கோபிநாத் என்பவர் அவர் வீட்டிற்கு முன்பு ரோட்டில் கைப்பேசியை பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி ஜெயபால் அங்கு வந்து, கோபிநாத் வைத்திருந்த கைப்பேசியை பிடுங்கிக்கொண்டார். கோபிநாத் கைப்பேசியை பிடுங்கி ஜெயபால் என்பவர் அலைப்பேசியை பார்த்தார். கோபிநாத் அலைப்பேசியை கொடுக்கும்படி கேட்டார். எதிரி தர மறுத்துவிட்டார்.

2. கோபிநாத் அவரது பாட்டி அவரது வீட்டிலிருந்த வசந்தாவிடம் சென்று எதிரி கைப்பேசியை பிடுங்கிய விபரத்தை கூறினார். வசந்தா வந்து, எதிரியிடம் ஏன் கோபிநாத்தின் கைப்பேசியை பிடுங்கினாய் என்று கேட்டார். அதற்கு எதிரி நான் எங்கு கைப்பேசியை பிடுங்கினாய் என்று கேட்டதற்கு எதிரி கைப்பேசியை பிடுங்கவில்லை என்று தேவுடியா என்று அசிங்மான வார்த்தைகளால் வசந்தாவை திட்டினார். எதிரி திட்டிக்கொண்டு கைப்பேசியை கீழே வீசினார். எதிரி அங்கிருந்த கல்லை எடுத்து வசந்தா மீது எறிந்தார். அதனால் அவருக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு வசந்தாவின் கணவர் பாண்டியன் வெளியே வந்து, எதிரியிடம் ஏன்பா வம்பு செய்கிறார் என்று கேட்டார். எதிரி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்து, பாண்டியனை பார்த்து நீ இருந்தால் தானே என்னுடன் சண்டைக்கு வருவாய் என்று கூறிவிட்டு, புண்டா மகனே என்று அசிங்கமாக திட்டி கத்தியால் இடதுப்பக்க நெஞ்சிலும், இடதுப்பக்க விலா எலும்பிலும் மாறி மாறி குத்திவிட்டார். நாங்கள் அருகில் சென்றவுடன் உங்களையும் குத்திவிடுவேன் என்று எங்களையும் மிரட்டினார். அதன்பின்னர் எதிரி அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார். நாங்கள் பாண்டியை ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு ஏற்றிவிட்டோம். வசந்தாவையும், அவரது பேரன் கோபிநாத், பேத்தி

ஆகியோர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஊரில் வைத்து சம்பவ தேதியில் ஒருமுறை விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மதியம் 3 மணி இருக்கும். எனது வீடு சம்பவ இடத்திலிருந்து எங்குள்ளது என்றால் கோவில் அருகே சம்பவ இடத்திலிருந்து 4, 5 வீடுகள் தள்ளி உள்ளது. போலீசார் விசாரணையில் அசிங்கமாக திட்டிய விபரத்தை கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆம்புலன்ஸில் நான் உடன் சென்றேனா என்றால் செல்லவில்லை. ஆம்புலன்ஸில் மேற்சொன்ன மூன்று நபர்களை தவிர்த்து வேறு யாரும் சென்றார்களா என்றால் செல்லவில்லை. சம்பவத்திற்கு பிறகு பாண்டியனையும், வசந்தாவையும் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனா என்றால் அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் சென்றுப் பார்த்தேன். யார் யார் சென்றோம் என்றால் ஊர் மக்கள் சென்றோம், என்னுடன் கார்த்திக்கேயன் வந்தாரா என்றால் நான் இருச்சக்கர வாகனத்தில் சென்றேன், அவர் மருத்துவமனைக்கு தனியாக வந்தார். சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்டு வந்தேனா என்றால் நாங்கள் அங்கு தான் நின்று பேசிக்கொண்டிருந்தோம், சத்தம் கேட்டவுடன் அருகில் சென்று பார்த்தோம். கட்டபொம்மன் சிலை அருகே டீக்கடை உள்ளதா என்றால் இல்லை.

4. சம்பவத்திற்கு பிறகு அந்த கைப்பேசியை யார் எடுத்துவந்தார்கள் என்றால் தெரியவில்லை. வசந்தாவை தாக்கிய கல் எந்த வகையான கல் என்றால் நான் பார்க்கவில்லை. எதிரிக்கும் புகார்தாரருக்கும்

ஏற்கனவே புகைமூட்டல் சம்பந்தமாக பிரச்சனை உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடம் ஜெயபால் வீட்டின் அருகே உள்ளதா அல்லது புகார்தாரர் வீட்டின் அருகே உள்ளதா என்றால் ஜெயபால் வீட்டின் அருகில் உள்ள பாலத்தின் பக்கத்தில் உள்ளது. எதிரி கத்தியால் பாண்டியனை குத்தவில்லை என்றாலும், பாண்டியன் எதிரியை விரட்டும்போது பாண்டியன், தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.19 18:10:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
19.02.2026

2026 பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19– ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 – துரைராஜ் |
| தகப்பனார் பெயர்: | வெள்ளைச்சாமி |
| ஊர்: | சடையால்பட்டி – வாடிப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 52 |

19.02.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், சடையால்பட்டி–வாடிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். கடந்த 30.11.2024 ம் தேதி மாலை 3.30 மணியளவில் நானும், ராமராஜ் என்பவரும் கட்டப்பொம்மன் சிலை அருகில் நின்றுக்கொண்டிருந்தோம். பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர்கள் அங்கு வந்தார்கள். பாண்டி என்பவரை குத்திய வழக்கு சம்பந்தமாக விசாரிக்க வந்ததாக சொன்னார்கள்.

எதிரி அங்கு சுமார் 10 அடி தூரத்தில் இருந்தார். போலீசார் அவரை விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள். ஜெயபால் பாண்டியை குத்தியதாக ஒப்புக்கொண்டு கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் மடிக்கணினியில் பதிவு செய்தார்கள். பின்பு வெளியில் சென்று அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பிரிண்ட் எடுத்து வந்தார்கள்.

2. எதிரி கத்தியால் பாண்டியனை குத்தியதாகவும், அவர் வீட்டின் அருகே உள்ள வாழைமரத்தின் அருகில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்துக்கொண்டு சென்று, மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி ஜெயபால் கையொப்பம் செய்தார், பின்னர் நானும், ராமராஜூம் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.3–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்னர் சுமார் 4.45 மணியளவில் எதிரியின் வீட்டின் அருகில் உள்ள வாழைமரத்தின் அடியிலிருந்து ஒரு கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தியை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், ராமராஜூம் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையததுதான். அது **அ.சா.ஆ.4 –**ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கத்தி 3/4 அடி நீளம் கொண்ட மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தியாகும். என்னிடம் காட்டப்படும் கத்தி எதிரி பாண்டியனை குத்துவதற்கு பயன்படுத்திய கத்தியாகும். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. வழக்குச் சம்பந்தமாக என்னை போலீசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் அன்றைய தேதியில் ஒருமுறை மட்டும் விசாரித்தார்கள். எனது வீடு சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது

என்றால் சுமார் 100 அடி தூரம் இருக்கும். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது கிராம நிர்வாக அலுவலர் இருந்தாரா என்றால் இல்லை, பொதுமக்கள் இருந்தார்கள். நானும், ராமராஜூம் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ராமராஜின் வீடு எங்குள்ளது என்றால் எனது வீட்டிலிருந்து 10 அடி தூரத்தில் உள்ளது.

4. சா.பொ.1 கத்தியில் இரத்தம்படிந்திருந்ததா என்றால் சம்பவத்திற்கு பின்பு கத்தியில் இரத்தம் இருந்தது. நான் சொன்னதுபோல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எனது முன்னிலையில் சா.பொ.1 கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. இதற்கு முன்னர் எதிரி மீது நடைபெற்ற கொலைவழக்கில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கொலை வழக்கிற்கு பின்னிட்டு இவ்வழக்கு எதிரிமீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.02.19 18:10:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
19.02.2026